தூத்துக்குடி ஒன்றியம் புதுக்கோட்டையில் நடைபெற்ற நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமினை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் தொடங்கி வைத்து பார்வையிட்டார். உடன் ஒட்டப்பிடாரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.சி.சண்முகையா, மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், கே.கே. ஆர்.ஜெயக்கொடி, பை. மூ.ராமஜெயம், தங்கதுரை பாண்டியன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் தென்காசி மாவட்டத்தில் பல்வேறு அரசுதுறை சார்பில் பயனாளிகளுக்கு பல கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்க 24-10-2025, 25-10- 2025 ஆகிய தேதிகளில் தென்காசிக்கு வருகை தர உள்ளதை முன்னிட்டு 24-10-2025 அன்று சங்கரன்கோவிலில் சிறப்பான வரவேற்பு அளிப்பது தொடர்பாக தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. உடன் ச.தங்கவேலு, பரமகுரு, இல.சரவணன், மனோகரன்,ராஜதுரை, புனிதா உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

பெரம்பலூரில் புதிய பேருந்து நிலையம் அமைக்கப்படுமா?

சட்டப்பேரவையில் ம.பிரபாகரன் கேள்வி!

சென்னை, அக். 22-

சட்டப் பேரவையில் பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன் எழுப்பிய கேள்வியும் அமைச்சர் கே.என்.நேரு அளித்த பதிலும் வருமாறு:-

ம. பிரபாகரன்: தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெரம்பலூர் நகராட்சியில் பல்வேறு சாலை வசதிகள், சுமார் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூட்டுக் குடிநீர்த் திட்டப் பணிகள், காய்கறி மார்க்கெட்டிற்கு புதிய கட்டடம், புதிய பேருந்து நிலையத்திற்கு விரிவாக்கக் கட்டடம், மாநகராட்சி அறிவிப்பு என பல்வேறு பணிகளைச் செய்து தந்திருக்கின்ற நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரம்பலூர் பழைய பேருந்து நிலையம் காமராஜர் காலத்தில் கட்டப்பட்டது. 1960 ஆம் ஆண்டு கட்டப்பட்ட அந்தப் பழைய கட்டடத்தை இடித்து விட்டு, புதிய பேருந்து நிலையம் கட்டித் தருவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் கே.என். நேரு: ஏற்கெனவே கடந்த ஆண்டு சட்டமன்றக் கூட்டத் தொடரில் சொல்லியதையடுத்து விரிவான திட்ட அறிக்கை அதற்காக தயாரிக்கப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு வரப்பெற்றவுடன், நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து ஆலோசனை செய்து பழைய பேருந்து நிலையத்தை இடித்து விட்டு புதிய பேருந்து நிலையம் கட்டுவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.

புதுக்கோட்டை பிரகதாம்பாள் கோயிலுக்கு கும்பாபிஷேகம் நடத்தப்படுமா?

பேரவையில் டாக்டர் வை.முத்துராஜா கேள்வி!

சென்னை, அக்.22-

அடுத்த ஆண்டு (2026) ஜனவரி 26ந் தேதி புதுக்கோட்டை பிரகதாம்பாள் கோயிலுக்கு ரூ.46 லட்சம் செலவில் கும்பாபிஷேகம் நடைபெறும் என்று அமைச்சர் சேகர்பாபு தெரிவித்தார்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா எழுப்பிய வினாக்களுக்கு அறித்த பதில் வருமாறு:-

வை.முத்துராஜா: புதுக்கோட்டை தொகுதியில் உள்ள ஸ்ரீபிரகதாம்பாள் உடனுறை திருக்கோகர்ணேஸ்வரர் கோயிலுக்கு திருப்பணி செய்து குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

அமைச்சர் பி.கே.சேகர் பாபு: புதுக்கோட்டை பிரகதாம்பாள் கோயிலுக்கு ரூபாய் 46 லட்சம் செலவில் திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இக்கோயில் குடமுழுக்கிற்கு அடுத்த ஆண்டு (2026) ஜனவரி 26ந் தேதி என்று நாள் குறிக்கப்பட்டிருக்கின்றது. அன்றைய தினத்தோடு இந்த ஆட்சி ஏற்பட்ட பிறகு கோயில்களின் 4,000 குடமுழுக்கு நிறைவு பெறும்.

டாக்டர் வை.முத்துராஜா: புதுக்கோட்டை பிரகதாம்பாள் உடனுறை திருக்கோகர்ணேஸ்வரர் கோயிலின் திருப்பணிகளுக்கு ரூபாய் 46 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்த முதலமைச்சருக்கும். துணை முதலமைச்சர் அவர்களுக்கும், அறநிலையத் துறை அமைச்சருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இக்கோயிலானது காசி விஸ்வநாதர் ஆலயத்தின் தீர்த்தத்திற்கு நிகரான புனிதத்தை கொண்டதும், சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான சியாமாசாஸ்திரி வந்து பாடிய ஆலயம் என்ற சிறப்பினையும் கொண்டது. புதுக்கோட்டை பெரிய கோயில் என்ற பெருமைக்குரிய பிரகதாம்பாள் கோயிலுக்கு போதிய உபயதாரர்கள் இல்லாத காரணத்தினால் குடமுழுக்கு நடத்த காலதாமதம் ஆகிறது. ஆகவே அரசு கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்து விரைந்து குடமுழுக்கு நடத்த அரசு முன்வருமா?

அமைச்சர் பி.கே.சேகர் பாபு: கோயிலின் திருப்பணி சுமார் 13 கோடி ரூபாய் செலவில் உபயதாரர்கள் நிதி கொண்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த மாத இறுதிக்குள் அந்த பணிகளை நேரில் சென்று ஆய்வு செய்து விரைவுபடுத்தி எவ்வளவு விரைவாக குடமுழுக்கு நடத்தப்பட வேண்டுமோ அவ்வளவு விரைவாக குடமுழுக்கு நடத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

டாக்டர் வை.முத்துராஜா: புதுக்கோட்டை மாநகராட்சி கீழமூன்றாம் வீதி நகரமையப்பகுதியில் அருள்பாலித்து வரும் வரதராஜ பெருமாள் கோயில் திருப்பணிகள் தொடங்கி இரண்டு ஆண்டுகள் ஆகின்றன. திருப்பணிகள் தொய்வின்றி விரைவாக நடைபெற அறநிலையத்துறை சார்பாக கூடுதல் நிதி ஒதுக்கிடவும், புதுக்கோட்டை மாநகராட்சி பல்லவன் குளம் அருகில் அமைந்துள்ள வேதநாயகம் உடனுறை சாந்தநாத சுவாமி திருக்கோயில் பருவ மழை காலத்தில் குளம் நிரம்பி கோயிலுக்குள் மழை நீர் சென்று விடுகிறது. பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய மிகவும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். ஆகவே அமைச்சர் பல்லவன் குளத்தை தூர்வாரி மழை நீர் வடிகால்களை சரி செய்து மறுசீரமைப்பு செய்து தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அமைச்சர் பி.கே.சேகர் பாபு: வரதராஜ பெருமாள் கோயிலில் ஒரு கோடி 46 லட்சம் ரூபாய் செலவில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதோடு உறுப்பினர் கோரிய அந்த தெப்பக் குளமானது மாசிமகத்திற்கு மாத்திரம் இந்து சமய அறநிலையத்துறை எடுத்துக் கொள்கிறது. மற்ற நேரங்களில் அந்த குளத்தைப் பொறுத்தளவில் மாநகராட்சி தான் பராமரிக்கின்றது.

குளத்திற்கு தண்ணீர் வருகின்ற பகுதிகளில் ஆக்கிரமிப்புகள் ஆகவே நிறைந்திருக்கின்றன. மாநகராட்சியும் மாவட்ட நிர்வாகமும் இந்து சமய அறநிலையத்துறையும் ஒருங்கிணைந்து இந்த தீபாவளிக்கு பிறகு ஆய்வுக் கூட்டத்தை நடத்தி நிரந்தர தீர்வு காணப்படும். இந்த மாசிமகம் தெப்பம் சிறப்பாக நடைபெறுவதற்கு அனைத்து . நடவடிக்கைகளையும் இந்து சமய அறநிலையத்துறை மேற்கொள்ளும்.

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில்

210 இடங்களிலிருந்து 57.84 மெட்ரிக் டன் பழைய பொருட்கள் அகற்றம்!

சென்னை, அக்.22-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாள்தோறும் சராசரியாக 6,500 மெட்ரிக் டன் திடக் கழிவுகளும், 1,000 மெட்ரிக் டன் கட்டடம் மற்றும் கட்டுமான இடுபாட்டுக் கழிவுகள் அகற்றப்பட்டு வருகிறது.

இந்நிலையில் பொதுமக்கள் குப்பைகள் மட்டுமல்லாது, தங்களது வீட்டில் உள்ள பழைய சோஃபாக்கள், மெத்தைகள், மரச்சாமான்கள் மற்றும் உடைகளை பொது இடங்களில் கொட்டுவதைத் தவிர்த்திடும் விதமாகவும், மக்களுக்கு இதன் காரணமாக ஏற்படும் இடையூறு மற்றும் சுகாதாரச் சீர்கேடுகள் ஏற்படுவதைத் தவிர்த்திடும் விதமாகவும், தமிழ்நாட்டில் முதல் முறையாக பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் பொதுமக்கள் முன்கூட்டியே தரும் தகவலின் அடிப்படையில், அவர்களின் வீடுகளிலிருந்து பழைய சோஃபாக்கள்,மெத்தைகள், மரச்சாமான்கள் மற்றும் உடைகள் ஆகிய திடக்கழிவுகளை அகற்றிடும் புதிய நடவடிக்கை 11.10.2025 அன்று தொடங்கப்பட்டது. இதில் 145 நபர்களிடமிருந்து வரப்பெற்ற தகவலின் அடிப்படையில் 45.64 மெட்ரிக் டன் பழைய பொருட்கள் பெறப்பட்டு, கொடுங்கையூரில் உள்ள எரியூட்டும் நிலையத்திற்கு எடுத்துச் சென்று விஞ்ஞான முறையில் எரியூட்டப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, இந்த வாரத்தில் முன் கூட்டியே தகவல் தந்த 210 நபர்களின் இடங்களிலிருந்து 57.84 மெட்ரிக் டன் பழைய பொருட்கள் 18.10.2025 அன்று பெறப்பட்டு, கொடுங்கையூரில் உள்ள எரியூட்டும் நிலையத்திற்கு எடுத்துச் சென்று விஞ்ஞான முறையில் எரியூட்டப்பட்டது. இப்பணியில் 83 வாகனங்களும், 200க்கும் மேற்பட்ட பணியாளர்களும் ஈடுபடுத்தப்பட்டனர்.

ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமையன்று நடைபெறும் இச்சேவையை பெறுவதற்கு, பொதுமக்கள் முன்கூட்டியே பெருநகர சென்னை மாநகராட்சியின் "நம்ம சென்னை" செயலியில் (App) பதிவு செய்ய வேண்டும் (அல்லது) பெருநகர சென்னை மாநகராட்சியின் 1913 என்ற எண்ணிற்கு தகவல் அளிக்கப்பட வேண்டும் (அல்லது) பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் பிரத்யேகமாக வழங்கப்பட்டுள்ள 94450 61913 என்ற வாட்ஸ்அப் எண்ணிற்கு தகவலை அனுப்ப வேண்டும்.

இதன் அடிப்படையில் மாநகராட்சிப் பணியாளர்கள் பதிவு செய்த நபர்களின் வீடுகளுக்கு ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் நேரடியாகச் சென்று, பழைய சோஃபாக்கள், மெத்தைகள், மரச்சாமான்கள் மற்றும் உடைகள் உள்ளிட்ட பொருட்களை சேகரித்து பாதுகாப்பாகவும், அறிவியல் முறையிலும் அகற்றும் பணிகளை மேற்கொள்வார்கள்.

இந்த நடவடிக்கையால், பொதுமக்கள் பொது இடங்களில் பழைய பொருட்களை தூக்கி எறிவதைத் தடுப்பதுடன், தெருக்களை சுத்தமாக வைத்திருக்கவும், அனைவருக்கும் சுகாதா ரமான வாழ்விடச் சூழலை உருவாக்குவதற்கும் வழிவகை ஏற்படும்.

சென்னை மாநகரினை தூய்மையாக வைத்துக் கொள்வதற்காக பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் நல் ஒத்துழைப்பு வழங்கிட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தென்காசிக்கு வருகை தரும்

முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. அறிவிப்பு!

தென்காசி.அக்.22

தென்காசி மாவட்டத்திற்கு வருகிற 24-10-2025 ,25-10-2025 ஆகிய நாட்களில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வருகை தர உள்ளதை முன்னிட்டு சிறப்பான வரவேற்பு அளிப்பது மற்றும் ஏற்பாடு தொடர்பாக தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க சார்பில் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் அணி அமைப்பாளர்கள்,கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ தலைமையில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ச.தங்கவேலு, பரமகுரு, மாவட்ட பொருளாளர் இல. சரவணன் மாவட்ட துணை செயலாளர்கள் மனோகரன், ராஜதுரை, புனிதா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

திராவிட மாடல் முதலமைச்சர் கழக தளபதியார் அவர்கள் தென்காசி மாவட்டத்திற்கு வருகிற 24-10-2025,25- 10-2025 ஆகிய தேதிகளில் வருகை தர உள்ளதை முன்னிட்டு ஏற்பாடுகள் மற்றும் சிறப்பான வரவேற்பு அளிப்பது தொடர்பான ஆலோசனை கூட்டம் சங்கரன்கோவில் ரயில்வே பீடர் சாலையில் உள்ள தென்காசி வடக்கு மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ பங்கேற்று பல்வேறு ஆலோசனைகளை வழங்கி வருகிற 24-10-2025 அன்று கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களுக்கு சங்கரன்கோவிலில் உற்சாகமான வரவேற்பு அளிக்க வேண்டும் என்றும்.பின்னர் 25-10-2025 அன்று தென்காசியில் மங்கம்மா சாலை சந்திக்கும் இடத்தில் பெட்ரோல் பங்க் அருகில் அமைந்துள்ள ஜாஸ் ஸ்மார்ட் சிட்டி மைதானத்தில் நடைபெற உள்ள அரசு நிகழ்வில் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள் பங்கேற்று பல்லாயிரக் கணக்கான பயனாளிகளுக்கு பல கோடி ரூபாய் மதிப்பிலான நதித்திட்ட உதவிகளை "எல்லாருக்கும் எல்லாம்"என்ற அடிப்படையில் வழங்கி சிறப்பிக்க உள்ளார்கள்.இதில் கழகத் தினர் திரளாக கலந்து கொள்ள வேண்டும் என்றார்.

நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் கள் வேல்சாமி பாண்டியன், பத்திரம் சாகுல் ஹமீது,மா.பராசக்தி, மகேஸ்வரி,ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கர பாண்டியன்,கடற்கரை, அன்புக்கரசு,சேர்மதுரை, கிறிஸ்டோபர், பெரியதுரை, ராமச்சந்திரன்,வெள்ளத்துரை,நகர செயலாளர்கள் மு.பிரகாஷ், அந்தோணிசாமி,நாகூர் கனி,பேரூர் செயலாளர்கள் கே.டி.சி.குருசாமி, ரூபி பாலசுப்பிரமணியன்,மாரிமுத்து, சேது சுப்பிரமணியன், அணி அமைப்பாளர்கள் முகேஷ், கிப்ட்சன், சிவசங்கரி, அப்பாஸ் அலி, விஜயா, மாடசாமி, பிரேம் குமார், பசுபதி பாண்டியன்,சந்திரன்,முத்துராமன், சாமுவேல், சரவணக்குமார்,கற்பகம்,

கழக நிர்வாகிகள் அண்ணாமலை, கவிதா, பொன்னுதுரைச்சி, பிரபாவதி மாரியப்பன்,கார்த்தி,ராஜராஜன், அன்சாரி, ஜலால் உள்பட கழகத்தினர், சார்பு அணிகளின் நிர்வாகி கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத் தொண்டர்கள் கலந்து கொண்டனர்.